மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண். 3/22

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ரமேஷ் தேதி : 14.10.25

வயது : த/பெ : சண்முக சுப்பிரமணியன்

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

---

<u>14.10.25 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2. 14.11.2011ம் தேதி வாதியின் தாயார் வாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.09.2021 ம் தேதிய வாடகை ரசீதினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 20.09.2021ம் தேதி வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:52:08 +0530

3. அஞ்சல் ஒப்புதல் அட்டையினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும். 11.10.2021 ம் தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும்.

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.14 19:52:14 +0530